BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம்  வரவுசெலவுத் திட்டம் சமர்ப்பித்தலுக்கான தனித்துவமான விருது பெறுகிறது

ப்ராம்ப்ட்டன், ON (மே 21, 2021) – ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது, அமெரிக்கா மற்றும் கனடா நாட்டின் அரசு நிதித்துறை அதிகாரிகளின் சங்கத்தினால் வழங்கப்படுகின்ற,  வரவுசெலவுத் திட்டம் சமர்ப்பித்தலுக்கான தனித்துவமான விருதினை தொடர்ந்து ஐந்தாவது வருடமாக பெற்றது.

இந்த விருதானது ப்ராம்ப்ட்டன் நகரத்திற்கான ஒரு குறிப்பிடத்தக்க சாதனையை பிரதிநிதித்துவம் செய்கிறது, மற்றும் இது அரசாங்க வரவு செலவுத் திட்டத்தின் மிக உயர்ந்த கொள்கைகளை பூர்த்தி செய்வதற்கான உறுதிப்பாட்டையும் பிரதிபலிக்கிறது. வரவுசெலவுத் திட்டம் சமர்ப்பித்தலுக்கான தனித்துவமான விருதினைப் பெறுவதற்கு, ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் ஒரு விளைவுமிக்க வரவு செலவுத் திட்டத்தை கீழ்க்கண்டவற்றுடன் சேர்த்து  தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டுதல்களை பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது.

- கொள்கை பற்றிய ஒரு ஆவணம்;
- நிதிபற்றிய ஒரு திட்டம்;
- இயக்க செயல்பாடுகளுக்கான ஒரு வழி காட்டிக் கையேடு: மற்றும்,
- தகவல் தொடர்புக்கான ஒரு சாதனம்.

விருதைப் பெறுவதற்கு, வரவு செலவுத் திட்ட ஆவணங்கள் இந்த நான்கு பிரிவுகளிலும்,  14 கட்டாய அளவுகோல்களிலும் புலமை வாய்ந்தது என தரம் குறிக்கப்பட வேண்டும். 2021 வரவுசெலவுத் திட்டத்திற்கு, ப்ராம்ப்ட்டன் நகர சபை 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 9 ஆம் தேதியன்றே   ஒப்புதல் அளித்தது;  இந்த கவுன்சில் காலத்தின் போது தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக சொத்து வரிகளை நிறுத்தி வைத்தது மற்றும் கை-இருப்பு நிதி வகையில் சாதனை படைக்கும் வகையிலான 114 மில்லியன் டாலர் பங்களிப்பை வழங்கியது.

GFOA இன் வரவு செலவுத் திட்ட விருதுகள் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தில் 1,600 க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் இருந்தனர். 20,500 க்கும் மேற்பட்ட உறுப்பினர்களுக்கு சிறந்த பழக்கமுறைகள், தொழில்தகைமையான வளர்ச்சி, ஆதாரவளங்கள் மற்றும் நடைமுறை

ஆராய்ச்சி ஆகியவற்றை வழங்குவதன் மூலம் GFOA ஆனது, அரசு நிதியத்தில் முன்னோடியாக சிறந்து விளங்குகிறது.

**அறிஞர் கூற்றுக்கள்**

“குறிப்பாக COVID-19 தொற்று பரவல் காலத்தில், நமது 2020 வரவுசெலவுத் திட்டத்திற்கான அமெரிக்கா மற்றும் கனடா நாட்டின் அரசு நிதித்துறை அதிகாரிகளின் சங்கத்தினால் வழங்கப்படுகின்ற, வரவுசெலவுத் திட்டம் சமர்ப்பித்தலுக்கான தனித்துவமான விருதினை வென்றது ஒரு முத்திரை பதிக்கின்ற சாதனையாகும். நிதித்துறையில் வெளிப்படைத்தன்மை மற்றும் நல்லாட்சியில் குறிப்பிடத்தக்க சாதனையை இந்த விருது பிரதிபலிக்கிறது. ”

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம், தலைவர், வரவுசெலவுத் திட்டக்குழு*

”ப்ராம்ப்ட்டன் நகரம் இந்த புகழ்பெற்ற விருதுக்காக விண்ணப்பித்து, தொடர்ந்து அதைப் பெற்றது இது ஐந்தாவது ஆண்டாகும். பட்ஜெட் என்பது ஒரு கூட்டு செயல்முறையாகும்; இதில் நகரசபைகவுன்சில், ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் மற்றும் வணிக சமூக உறுப்பினர்கள் என அனைவருமே நகரத்தின் எதிர்காலத்தை வடிவமைக்க உதவுகிறார்கள். தெளிந்த, வெளிப்படையான மற்றும் தகவல் வழங்கும் வகையிலான வரவு செலவுத்திட்ட ஆவணம் தான் இந்த விருதை வெல்ல எங்களுக்கு உதவியது. ”

*- பால் விசெண்ட், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 மற்றும் 5, மற்றும் துணைத்தலைவர், வரவுசெலவுத் திட்டக்குழு*

”இந்த கவுரவம் மிக்க மிக்க விருதை அரசாங்க வரவு செலவு திட்டமிடுவதற்காக பெற்றதில் நாங்கள் பெருமைப்படுகிறோம். இந்த சாதனையானது, சிறப்பாக இயங்கும் நகரமாக இருப்பதற்கான எங்கள் முயற்சிகளை எதிரொலிக்கின்ற வகையில் நமது சமூகத்திற்கு சிறந்ததை வழங்குவதற்கான ப்ராம்ப்ட்டன் அணியின் கடமையுணர்விற்கு ஒரு சான்றாவணமாகும். ”

*- டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள்

சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுதிரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca